DVC 11/2019
Pw1– பிரதிபா
Date: 16.08.2022

எதிர் மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. 13 1/2 பவுன் நகை சீதனமாக போடவில்லை என்றும் வழக்கிற்காக 13 1/2 பவுன் நகை போட்டாதாக பொய்யாக சாட்சியம் சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

2. கார்த்தி என்பவர் எனது அத்தை மகன். கார்த்தி என்பவருடன் உங்களுக்கு பழக்கம் என்பதால் அதை எதிர்மனுதாரர் கண்டித்ததால் நான் எதிர்மனுதாரருடன் கோபித்துக் கொண்டு எனது விட்டிற்கு சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் எதிர்மனுதாரர் இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் என் மீது விவாகரத்து பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் அந்த வழக்கில் ஆஜராகவில்லை.

3. 05.04.2021ம் தேதியே மேற்படி வழக்கில் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வின்னர் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி மாதம் ரூ.12000/– வருமானம் ஈட்டி வருகிறேன் என்றால் இல்லை.

4. நான் தற்போது எனது தகப்பானருடன் இருந்து வருகிறேன். எனது தகப்பனார் நிறைய சொத்துக்களை வைத்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் இரண்டு வயல் வைத்து தான் விவசாயம் செய்து வருகிறார்.

5. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் சண்டையின் காரணமாகத்தான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் வரதட்சனை கேட்டதாக புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் வீட்டை வீட்டு கிளம்பும்போது

எதிர்மனுதாரருடைய பணம் ரூ30000/- எடுத்தச் சென்றுவிட்டேன் என்று சொன்னால் அது பொய்.

6. நான் தனித்த முறையில் ஆசிரியராக பணியாற்றி மாத வருமானம் ஈட்டி வருவதாலும் என்னை நானே பராமரித்துக் கொள்ளும் அளவுக்கு போதிய பண வசதி இருக்கிறது என்பதால் சட்டப்படி நான் தாக்கல் செய்துள்ள மனு ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. எதிர் மனுதாரர் தற்போது வேலை இல்லாமல் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. மனுவில் கண்ட பரிகாரங்கள் தங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.